நாள்- 05 .01.2023

Case No. OS.59/2015

PW.2 – கிருஷ்ணன் – 1,4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி மண்ணுவுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் அவருடன் சேர்த்து 7 பேர்கள். வாதி காந்திமதிநாதன் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் எங்கள் ஊரைசேர்ந்தவர். என் மனைவி பெயர் என்ன என்றால் உமேஷ்வரி. என் மனைவி உமேஷ்வரி காஞ்சனாவின் சகோதரி என்றால் சரியல்ல. காஞ்சனாவின் தாயார் ஊர் என்ன ஊர் என்றால் இசையனூர் ஆகும், பின்னிட்டு சாட்சி பாப்பேரி என்று சாட்சியம் சொல்கிறார். 4ம் பிரதிவாதி சுமதி என்பவர் யார் என்றால் 1ம் பிரதிவாதி மண்ணு என்பவரின் 2வது மனைவி ஆவார். 5ம் பிரதிவாதி லட்சுமி என்பவர் யார் என்றால் சுமதி மற்றும் மண்ணுவிற்கு பிறந்த மகள் என்றால் சரிதான். சுமதிக்கு தற்போது சுமார் 58 வயதிருக்கும் என்றால் சரிதான். தற்போது காந்திமதிநாதனுக்கு சுமார் 35 வயது இருக்குமா என்றால் இருக்கும். மண்ணு என்பவருக்கு தற்போது சுமார் 75 வயது இருக்கும் என்றால் சரிதான். காஞ்சனாவிற்கு சுமார் 48 வயது இருக்குமா என்றால் சரியல்ல, சுமார் 65 வயது இருக்கும். லட்சுமி என்பவருக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 35 வயது இருக்கும். 3ம் பிரதிவாதி ராஜிவ்காந்திக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 28 வயது இருக்கும். ராஜிவ்காந்தி மற்றும் வாதி காந்திநாதன் என்ன படித்துள்ளார்கள் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார்கள். வாதியும், 3ம் பிரதிவாதியும் எங்கு படித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது, நான் அப்போது சென்னையில் இருந்தேன். எவ்வளவு ஆண்டுகாலமாக சென்னையில் குடியிருந்தேன் என்றால் 10 ஆண்டுகாலமாக சென்னையில் குடியிருந்தேன், லாரி ஓட்டி வந்தேன். நான் 10 ஆண்டுகாலமாக வெளியூறில் இருந்த காலத்தில் என்ன நடந்த என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து வீடா,

மனை நிலமா அல்லது தோட்டமா என்றால் நிலம் ஆகும். எவ்வளவு நிலம் இருக்கும் என்றால் 25 ஏக்கர் நிலம் இருக்கும். மேற்படி நிலமானது நஞ்சை நிலமா, புஞ்சை நிலமா என்றால் இரண்டும் இருக்கும். அதில் எவ்வளவு ஏக்கர் புஞ்சை நிலம் , எவ்வளவு ஏக்கர் நஞ்சை நிலம் என்றால் 3 ஏக்கர் புஞ்சை நிலம், மற்றும் 22 ஏக்கர் நஞ்சை நிலம் ஆகும். 2ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் சுமார் 40 வருடம் முன்பு திருமணம் நடந்தது. எங்கு அவருக்கு திருமணம் ஆனது என்றால் ரத்தினகிரியில் திருமணமானது. அவருக்கு திருமணம் நடைபெறும்போது எனக்கு என்ன வயதிருக்கும் என்றால் சுமார் 12 வயதிருக்கும். எந்த ஆண்டு வாதி மற்றும் 3ம் பிரதிவாதி பள்ளியில் படித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. காஞ்சனா எந்த தெருவில் உள்ளார் என்றால் பஜனைகோயில் தெருவில் உள்ளார். லட்சுமி எந்த தெருவில் உள்ளார் என்றால் விஷாரத்தில் உள்ளார். மண்ணுவிற்கு பூர்வீகமாக வந்த சொத்து எவ்வளவு என்றால் எல்லாம் அவருடைய தந்தை கோபால் சம்பாதித்த சொத்தாகும். மண்ணும் எவ்வளவு கிரையமாக வாங்கியுள்ளார் என்றால் அவர் கிரையம் எதுவும் வாங்கவில்லை, அனைத்து சொத்து அவரது தந்தை கோபால்தான் வாங்கினார். மண்ணு, சுமதி, லட்சுமி ஆகியோர்கள் ஒன்றாக இருந்து வருகிறார்களா என்றால் இல்லை, லட்சுமியை விஷாரத்தில் கட்டி கொடுத்துள்ளார்கள், சுமதி மற்றும் மண்ணு இசையனூரில் உள்ளார்கள். 5ம் பிரதிவாதி லட்சுமியை ராஜ்குமாருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். மண்ணும் , சுமதியும் சொத்துக்களை பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான், வாதியும் சேர்த்து பராமரித்து வருகிறார். தாவா சொத்து சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு படித்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் மண்ணும் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணம் மண்ணும் கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் மேற்படி பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.7 கிரையம் பெற்றது குறித்து

எனக்கு தெரியாது. காஞ்சனா என்பவர் மண்ணுவின் 2 வது மனைவி கிடையாது மற்றும் வாதி , 3 ம் பிரதிவாதி மண்ணுவின் மகன்கள் கிடையாது என்றால் சரியல்ல. காஞ்சனா எனக்கு உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுமதி என்பவர் தான் மனைவி மற்றும் லட்சுமி என்பவர் தான் அவரது மகள் என்றும் அவர்கள்தான் சொத்துக்களுக்கு முழு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.